RESOURCES FOR MTLs

# பாடல்வழிச் சொல்வளத்தைப் பெருக்குதல்
# பாலர் பள்ளி முதலாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 4
# ‘லட்டு’

**<u>கண்ணோட்டம்:</u>**

‘தோசை நல்ல தோசை’ என்னும் பாடலை இசையுடனும் அசைவுகளுடனும் பிள்ளைகள் ஆசிரியருடன் சேர்ந்து பாடுவார்கள். பின்னர்,இப்பாடலையொட்டி ஆசிரியருடன் கலந்துரையாடுவார்கள். இதன்வழிப் பாடலுடன் தொடர்புடைய நிறைய சொற்களைப் பிள்ளைகள் அறிந்துகொள்வார்கள்.

**<u>கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்றல்**
   - ✓ பாடலில் இடம்பெற்றுள்ள அசைவுகளைச் செய்தல்
2. **தாய்மொழி நடவடிக்கைகளை விரும்புதல்**
   - ✓ பாடல்களில் கவர்ந்த வரிகளை ஒப்பித்தல் அல்லது பாடலுக்கு ஏற்றவாறு அசைவுகளைச் செய்தல்
   - ✓ பாடல்களைக் கேட்கும்போதும் பாடல்களைப்பற்றி உரையாடும்போது எதிரில் இருப்பவரோடு கண் தொடர்பு கொள்ளுதல்

**<u>கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்</u>**

1. **புரிந்துணர்வுடன் கேட்டல்**
   - ✓ பாடல்கள் பாடும்போது பொருத்தமான அசைவுகளையும் செய்கைகளையும் செய்தல்

**<u>கற்றல் குறிக்கோள் 3: நம் பல்லினப் பண்பாட்டைத் தெரிந்துகொள்ளுதல்</u>**

1. **பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் தெரிந்துகொள்ளுதல்**
   - ✓ பாடல் எடுத்துரைக்கும் அறநெறிப் பண்புகள் குறித்த தங்கள் எண்ணங்களை / சிந்தனைகளை வெளிப்படுத்துதல்

## படிநிலைகள்

1. காலை உணவு சாப்பிட வேண்டியதன் அவசியத்தைப் பிள்ளைகளிடம் வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

2. ‘தோசை நல்ல தோசை’ என்னும் பாடலைப் பிள்ளைகளிடம் அறிமுகம் செய்யுங்கள்.

**<u>தோசை நல்ல தோசை</u>**

தோசை நல்ல தோசை - அம்மா சுட்டுத்

தந்த தோசை

ஆசை யாக எனக்கே - என்

அம்மா தந்த தோசை

வட்ட மான தோசை - அது

மாவில் சுட்ட தோசை

தட்டு நிறைய நிறைய - அம்மா

சுட்டுத் தந்த தோசை

- அழ. வள்ளியப்பா

3. பிள்ளைகளைத் ‘தோசை நல்ல தோசை’ என்னும் பாடலை உங்களுடன் இணைந்து உற்சாகமாகவும் அசைவுகளுடனும் பாடச் சொல்லுங்கள்.

4. பிள்ளைகளைப் பாடலுக்கு ஏற்ப அபிநயம் செய்துகொண்டே பாடச் சொல்லுங்கள்.





**பிள்ளைகள் உற்சாகமாகவும் அசைவுகளுடனும் பாடலைப் பாடுதல்**

5. நீங்கள் பிள்ளைகளிடம் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்;

  - நீ தோசை சாப்பிட்டிருக்கிறாயா?
  - உனக்குத் தோசை சாப்பிடப் பிடிக்குமா? ஏன்?
  - நீ என்ன தோசையை விரும்பிச் சாப்பிடுவாய்? ஏன்?



**ஆசிரியர் பிள்ளைகளிடம் கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடுதல்**

6. நீங்கள் தோசையைத் தவிர வேறு என்னென்ன காலை உணவுகளைச் சாப்பிடுவீர்கள் என்று பிள்ளைகளிடம் கேளுங்கள். அவர்களிடம் காலை உணவு வகைகளின் பட அட்டைகளைக் காட்டிக் கலந்துரையாடுங்கள்.




**காலை உணவு வகைகளின் படங்களைக் காட்டிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடுதல்**

7. பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவையும் பட அட்டைகளில் உள்ள உணவு வகைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுங்கள். ‘தோசை நல்ல தோசை’ பாடலில் வரும் **தோசை** என்னும் சொல்லுக்குப் பதிலாகப் பிள்ளைகள் தேர்ந்தெடுத்தச் சொல்லை இணைத்துப் பாடலைப் பாடச் சொல்லுங்கள்.

8. பிள்ளைகள் அன்று படித்தச் சொற்களை மீண்டும் நினைவுக்கூரச் சொல்லுங்கள்.





**பிள்ளைகள் அன்று படித்த சொற்களை ஆசிரியரின் உதவியுடன் நினைவுகூர்தல்**

***********************